

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற நவ 29 தேதி விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை புரிந்து திறந்து வைக்கவிருக்கும் முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி அவர்களின் மணிமண்டபம், சமூக நீதி இட ஒதுக்கீடு போராட்டத்தில் உயிர் நீத்த 21 தியாகிகளின் நினைவு மண்டபம் மற்றும் திருவெண்ணெய்நல்லூர் எல்லீஸ் சத்திரம் அணையை வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட ஆட்சியர் சி.பழனி, விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதம சிகாமணி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்டப் பொருளாளர் இரா ஜனகராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன் , ஒன்றியச் செயலாளர்கள் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், ஜி.ரவிச்சந்திரன், க.மும்மூர்த்தி, பி. தெய்வசிகாமணி,தே.முருகவேல், கல்பட்டு வி ராஜா, பேரூர் செயலாளர் பா ஜீவா, பொதுக்குழு உறுப்பினர் டி.என்.ஜெ.சம்பத், ஒன்றிய குழுத் தலைவர் ஓம் சிவ சக்திவேல், மாவட்ட இளைஞர் அணி செ.தினகரன், தொண்டர் அணி கபாலி, தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆர்.பி.பரத் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



திருச்சி மாவட்டம் துறையூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெரம்பலூர் நாடாளுமன்ற எம்.பி. அருண் நேரு அலுவலகத்தை திறந்து வைத்தார். உடன் அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ். ரகுபதி, எஸ்.எஸ்.சிவசங்கர், கோவி செழியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி , சிவ.வீ.மெய்ய நாதன், பெரம்பலூர் மாவட்டப் பொறுப்பாளர் ஜெகதீசன், வடக்கு மாவட்டச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.11.2024) கடலூர் மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பொன்விழாவினை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு வழங்கும் விழாவில், பல்வேறு அரசு துறைகளின் சார்பில் 12,100 பயனாளிகளுக்கு, 80 கோடி ரூபாய் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன், எம்.கே.விஷ்ணு பிரசாத் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.ஐயப்பன், சபா.இராஜேந்திரன், எம்.ஆர்.இராதாகிருஷ்ணன், ம.சிந்தனைச்செல்வன், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா, மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில் குமார், துணை மேயர் பா.தாமரைச்செல்வன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஜன.14 பொங்கல் தினத்தன்று தேர்வுகளை நடத்துவதா?

# தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து தேர்வுத் தேதியை மாற்றிட வேண்டும்!

### நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி ஒத்தி வைப்பு தீர்மானம் தாக்கல்!

புதுடெல்லி, நவ.27 -

**ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் ICAI, தமிழ்நாட்டில் சி.ஏ. பவுண்டேஷன் தேர்வுகளை ஜனவரி 14 பொங்கல் தினத்தன்று நடத்தத் திட்ட மிட்டுள்ளது. தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து உடனடியாக இந்த தேர்விற்கான தேதியை மாற்றியமைக்கக் கோரி தி.மு.க.வின் நாடாளுமன்ற குழுத்தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள், ஒத்திவைப்பு தீர்மானத்தைத் தாக்கல் செய்துள்ளார்.**

இதுகுறித்து கனிமொழி கருணாநிதி தாக்கல் செய்த ஒத்திவைப்பு தீர்மானம் வருமாறு:

2025 ஜனவரி 14 மற்றும் 16 ஆம் தேதிகளில் CA தேர்வைப் பொங்கல் பண்டிகை அன்று நடத்தும் முடிவு, தமிழகத்தின் கலாச்சார மரபுகள் மற்றும் மக்களின் உணர்வுகளை ஒன்றிய அரசு புறக்கணிப்பதை எடுத்துக் காட்டுகிறது.

பொங்கல் வெறும் பண்டிகை அல்ல; இது தமிழ் பாரம்பரியத்தின் உயிர் நாடியாகும். குடும்பங்கள் ஒன்று கூடி அவர்களின் கலாச்சாரம் மற்றும் விவசாய வாழ்க்கை முறையைக் கொண்டாடும் பண்டிகை தான் பொங்கல். இது போன்ற முக்கியமான தருணத்தில் தேர்வுகளைத் திட்டமிடுவது மாணவர்கள் மற்றும் குடும்பத்தினர் மீது தேவையற்ற மன அழுத்தத்தை ஏற்படுத்துகிறது.

மகர சங்கராந்தி போன்ற பண்டிகைகள் இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது என்று கூறி விமர்சனங்களைத் திசை திருப்ப பாஜக முயற்சிக்கும் அதே வேளையில், இந்த வாதம் தமிழர்களின் பொங்கல் பண்டிகையின் தனித்துவத்தை அங்கீகரிக்கத் தவறி விட்டது.



தீபாவளி (இந்த மாதம் நவம்பர் 2024) மற்றும் மக்களவை தேர்தல் (மே 2024) போன்ற காரணங்களுக்காகத் தேர்வுகளை ஒத்தி வைத்த அதே ஐசிஏஐ, இப்போது தமிழகத்தின் மிக முக்கியமான பண்டிகைக்கு இடமளிக்க மறுப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. ஒன்றிய அரசின் உணர்வின்மை எடுத்துக்காட்டுகிறது. நமது நாட்டின் பன்முகப் பண்பாட்டுக் கட்டமைப்பில் அரசு காட்டும் அலட்சியம், தமிழ் அடையாளத்தைக் குழி தோண்டிப் புதைக்கும் அதன் தொடர்ச்சியான முயற்சிகளைப் பிரதிபலிக்கிறது.

ICAI என்பது பாராளுமன்றச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும். ஒன்றிய அரசு மாநில அரசுகளின் மரபுகளை மதித்து, தேர்வுகளை மறு அட்டவணைப் படுத்த ICAI அமைப்புக்கு உடனடியாக உத்தரவிட வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், பாஜக தலைமையிலான ஒன்றிய அரசு, தமிழகத்தின் மீதான அக்கறையின்மையை மேலும் வெளிப்படுத்துவதோடு, அதன் தமிழர் விரோத அணுகுமுறையின் கருத்தை வலுப்படுத்துவதையே காட்டுகிறது.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி ஒத்தி வைப்பு தீர்மானத்தை தாக்கல் செய்துள்ளார்.

## தேர்தல் நேரத்தில் மட்டும்

# வன்னியர்கள் மீது அக்கறை காட்டும் ராமதாஸ்!

### அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் எச்சரிக்கை!

அரியலூர், நவ. 27 -

டாக்டர் ராமதாஸ் நான்கு ஆண்டு காலம் மறந்து விடுவார் தேர்தல் வரும் போது தான் வன்னிய மக்கள் குறித்து அக்கறை வரும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் குற்றம் சாட்டி உள்ளார்.

அரியலூர் மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட அமைச்சர் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

வரும் 28ஆம் தேதி விழுப்புரம் செல்லும் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் வன்னிய சமூகத்தின் பிரதிநிதியாக முதல் முறையாக உழவர் உழைப்பாளர் கட்சி சார்பாக சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்ட மறைந்த முன்னாள் அமைச்சர் கோவிந்தசாமியின் நினைவிடத்தை திறந்து வைக்கிறார்.

இதனையடுத்து வன்னியர்களுக்கான இட ஒதுக்கீட்டில் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சுடப்பட்டு கொல்லப்பட்ட வன்னிய சமூகத்தை சேர்ந்த வன்னிய இட ஒதுக்கீடு போராளிகளுக்கு நினைவு மண்டபத்தை தமிழ்நாடு முதலமைச்சர் திறந்து வைக்கிறார்.

இது வன்னிய மக்கள் மீது தமிழ்நாடு முதலமைச்சர் காட்டும் மதிப்பை சிறப்பாக எடுத்துக் காட்டும் எனவே அவர் மீது புழுதி வாரி தூற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த நிகழ்ச்சி நடக்கிற நேரத்தில் டாக்டர் ராமதாஸ் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

அவருக்கு நான்கு ஆண்டு காலம் எப்பொழுதும் போல மறந்து விடுவார் தேர்தல் வரும் போது தான் வன்னிய மக்கள் குறித்து அக்கறை வந்துவிடும் அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் சட்டமன்ற தேர்தல் அறிவிக்கும் நாளன்று காலையில் 10.5 சதவீத இட ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டதை வைத்து தேர்தலில் அறுவடை செய்தார் அதேபோன்று தற்போதும் அறுவடை செய்யலாம் என துடிக்கிறார் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் மக்கள் அறிவார்கள் 20 சதவீதத்தின் மூலம் என்ன நடக்கிறது 10.5 வந்தால் என்ன இழப்பு வரும் என்பதை மக்கள் அறிவார்கள் எனவே முதல்வர் மீது புழுதி வாரி தூற்றும் பணியை டாக்டர் ராமதாஸ் நிறுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு



அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேட்டியளித்தார்.

தமிழ்நாட்டில் முதலமைச்சர் கலைஞர் உரிமைத் தொகை திட்டம் ஜார்கண்ட், மகாராஷ்டிரா மாநிலங்களில் பின்பற்றியுள்ளனர்.

அது மக்களிடத்திலே வரவேற்பு பெற்றுள்ளது எனவே ஜார்கண்ட் மகாராஷ்டிரா மாநில சட்டமன்ற தேர்தல் முடிவு காட்டுவதாக அரசியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

ராமதாஸ் பேசுகிற பேச்சை விட தமிழ்நாடு முதலமைச்சர் எந்த விதத்திலும் குறைத்து பேசிவிடவில்லை. தவறாக பேசிவிடவில்லை. டாக்டர் ராமதாஸ் தான் யாரையும் எடுத்தெறிந்து பேசுவது, ஒருமையில் பேசுவது வழக்கம் அவர் சமீபத்தில் முதல்வரை பற்றி பேசிய பேச்சை கேட்டால் நன்றாக தெரியும்.

**அன்புமணிக்கு அமைச்சர் சிவசங்கர் எச்சரிக்கை!**

தேர்தலுக்கு ஒரு வருடம் முன்பு மக்களை நோக்கி வருவதற்கு ராமதாஸ் துடித்து கொண்டுள்ளார். கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் தேர்தல் அறிவிக்கும் அன்று காலையில் 10.5 வன்னியர்களுக்கான இட ஒதுக்கீடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இட ஒதுக்கீடு வழங்கியதற்கான தரவுகள்,ஆதாரங்கள் இல்லாததால் அது செல்லாது என நீதிபதி தெரிவித்து இட ஒதுக்கீட்டை ரத்து செய்தார்.

எனவே டாக்டர் ராமதாஸ் வன்னியர்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்றால் இவற்றையெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு உங்களுடைய டாக்டர் வேலையை பாருங்கள் தமிழ்நாட்டில் இட ஒதுக்கீட்டை பார்த்து பார்த்து செய்து கொடுத்தவர்.

கலைஞர் அவருக்கு தெரியாதது உங்களுக்கு எதுவும் தெரிந்துவிட போவதில்லை.

தற்பொழுது முதல்வர் செய்யும் சாதனைகளை பார்த்து மற்ற மாநிலங்கள் அவற்றை நிறைவேற்றி வருகின்றனர்.

என்ன செய்ய வேண்டும் என்பதை முதல்வர் அறிவார்.

அதை செய்து கொண்டிருக்கிறார் அவரை தரக்குறைவாக விமர்சனம் செய்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் முதல்வர் யார், அவருடைய தரம் என்பதை புரிந்து கொண்டு பேச வேண்டும்

இவர் முதல்வரை பார்த்து மன்னிப்பு கேட்க சொல்கிறார்.

யார் யாரை பார்த்து மன்னிப்பு கேட்க வேண்டும்.

இந்தியாவை ஆட்டி படைக்கின்ற மோடி அமிக்ஷாவை எதிர்த்து கேள்வி கேட்கக் கூடிய ஒரே முதல்வர் திராவிட மாடல் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள். கொள்கை ரீதியாக சித்தாந்தம் ரீதியாக எதிர்க்கிறோம் என்று துணிச்சலாக நின்று பேசியவர் எங்கள் முதல்வர்.

திராவிட முன்னேற்ற கழகத்தை எச்சரிக்கின்ற வேலை எல்லாம் நீங்கள் வைத்துக் கொள்ள வேண்டாம்.

அன்புமணி இது போன்று பேசுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசினார்.





தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, ஈரோடு மாவட்டம் அந்தியூர் சட்டமன்றத் தொகுதி அந்தியூர் பேரூராட்சியில், ஈரோடு மாவட்ட கூட்டுறவுத் துறை கே.290 அந்தியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கீழ் 39 விவசாயிகளுக்கு 60 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பயிர் மற்றும் நகைக்கடனுக்கான காசோலைகளை அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் வழங்கினார். நிகழ்வில் செயலாளர் பொறுப்பு சீனிவாசன், பேரூராட்சி மன்ற தலைவர் எம்.பாண்டியம்மாள், பேரூர் கழக செயலாளர் எஸ.கே.காளிதாஸ், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ஏ.சி.பழனிச்சாமி, தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் எம்.நாகராஜ் , மாரசாமி உள்ளிட்ட பலர் உள்ளனர்.



கழக இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்ட அயலக அணி சார்பில் வாழப்பாடி அரசு மருத்துவமனையில் அயலக அணி மாவட்ட அமைப்பாளர் திருநாவுக்கரசு முன்னிலையில் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் தலைமை தாங்கி இரத்த தான முகாமை துவக்கி வைத்தார். இந்த முகாமில் 48 பேர் இரத்ததானம் செய்தனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் கருணாநிதி, மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, அயலக அணி மாநில துணைசெயலாளர் உமாராணி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ. ஏ. ஆறுமுகம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ. சீனிவாசன், பொதுக்குழு உறுப்பினர் மலர்விழிராஜா, முத்துலிங்கம், ஒன்றிய செயலாளர்கள் சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், டாக்டர் செழியன், மருதமுத்து, சிவராமன், மூர்த்தி, ராஜேந்திரன்,நகர செயலாளர் பாலசுப்பிரமணியன், பேரூர் செயலாளர்கள் செல்வம், வெங்கடேஷ், சுற்று சூழல்அணி அமைப்பாளர் வரத. ராஜசேகர், வீரேந்திரகுமார், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ப்ரண்ட்ஸ் ரமேஷ், அயலக அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் விஜயகுமார், ஜோதிவேல், ஷாஜகான், பிரதீப், ஜெயக்குமார் ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தனர்.



மாற்றுக் கட்சிகளில் இருந்து திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில், அ.தி.மு.க. வட்டகழகப் பொருளாளர் துரை, தே.மு.தி.க ஆரோக்கியராஜ், அ.மு.மு.க மாவட்ட இளைஞர் பாசறை செயலாளர் மணிகண்டன் ஆகியோர் தலைமையில் அக்கட்சிகளில் இருந்து விலகி திருச்சி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் திராவிட முன்னேற்ற கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். திருச்சி மாநகரம் காட்டூர் பகுதி மற்றும் மணப்பாறை தொகுதி மருங்காபுரி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் இருந்து மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்டோர் அக்கட்சிகளில் இருந்து விலகி தி.மு.கவில் தங்களை இனைத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன், பகுதி கழகச் செயலாளர் நீலமேகம், ஒன்றிய கழகச் செயலாளர் பழனியாண்டி ஆகியோர் உடன் இருந்தனர்.